முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் பதஞ்சலியார் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

08.05.2019, புதன்கிழமை

1. **சன்மார்க்க நெறிபட உலகம்**
**சமத்துவ நிலை பெற்று உயர**
**நன்மைதரும் ஞான சக்தியாக**
**ஞானியாக வந்த அரங்கனே**
2. அரங்கனே உன் பெருமை கூறி
அகிலமதில் **விகாரி தகர் திங்கள்**
**வரங்களென இருபானை திகதி புந்தி வாரம்**
**(விகாரி வருடம் சித்திரை மாதம் 25ம் நாள் 08.05.2019, புதன்கிழமை)**
**வழங்குவேன் நித்ய பிரசன்ன ஆசியை**
3. **ஆசியை பதஞ்சலியார் யானும்**
அருளுவேன் உலகோர் நலம் பெற
ஆசி பெற்று உலக மக்களெல்லாம்
அரங்கன் ஞான வழிக்கு வர
4. வருகவே சமுதாயம் எங்குமே
வளரும் சுத்த சைவநெறி
முருகப்பெருமான் வழிபாடுமே
முழுமைபட எங்கும் பரவி நன்கு
5. பரவியே மக்களிடை மனபலம்
பாதுகாப்பான சூழல் பெருகும்
துறவி போல தியாகம் மிக்க
தேசநலம் கருதும் அன்பர்களாய்
6. அன்பர்களாய் அரங்கன் வழி வரும்
அனைத்து மக்களும் தேறியே
துன்பமில்லா சமூகம் படைப்பர்
தேசிகன் கொள்கை ஆளும் வண்ணம்
7. வண்ணமுடன் ஞானத்தலைமையும்
வரலாற்றில் மாற்றமும் காணும்
எண்ணமெல்லாம் தருமசிந்தையும்
எதிலும் பேதமிலா நிலை காணும்
8. காணவே துறையூர் எல்லை
கனிவுபட நடக்கும் தருமமே
ஞானயுகம் படைக்கும் வழியாகும்
நம்பகம் கொண்டு உலக மக்கள்
9. மக்களெல்லாம் தருமத்தில் உதவி
மற்ற தேசமும் தருமம் பரவ
தேக்கமிலா எங்கும் பசுமை
தேசமெங்கும் பருவமழை சிறந்து

10. சிறந்துமே இயற்கை பலமும்
சிறப்பான ஆளுமையும் கூடி
சிறந்த ஞானவான் தலைமையாக
செப்பிடுவேன் ஞானயுகமாகும்

11. ஆகவே ஆறுமுகன் சக்தியான
அரங்கனே முருகப் பெருமானே
வகைபட மாற்றம் செய்து வரும்
வள்ளலே உன் தலைமை வருக வெல்க நித்ய பிரசன்ன ஆசி முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் பதஞ்சலியார் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூலின் சாரம் :**

உலகமெலாம் சன்மார்க்க நெறி பரவி உலகமே அதை கடைப்பிடித்து சமத்துவம்மிக்க உயர்ந்த நிலையினை அடைந்து மேன்மை பெறவே எல்லா நன்மைகளையும் தந்தருளும் மகா ஞானசக்தி வடிவமாக முருகப்பெருமானின் அவதாரமாக வந்து உதித்த ஆறுமுக அரங்கமகா தேசிகனே அற்புதமான உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலம் கருதி விகாரி வருடம் சித்திரை மாதம் 25ம் நாள் 08.05.2019, புதன்கிழமையான இன்றைய தினமதனிலே நித்ய பிரசன்ன ஆசி நூல்தனையே பதஞ்சலியார் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் பதஞ்சலியார்.

உத்தம மகா ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகன் ஆசிகளைப் பெற்று அரங்கமகா தேசிகனார் கூறும் ஞானவழிகளை பின்பற்றி வந்திட உலகின் சமுதாயம் நல்சமுதாயமாக வளர்ச்சி அடையும். உலகமெலாம் சுத்த சன்மார்க்க நெறி பரவி, உயிர்க்கொலை தவிர்த்து, புலால் மறுத்து, சுத்த சைவநெறி பரவுவதோடு ஞானத்தலைவன் முருகப்பெருமானை உலக மக்களெல்லாம் வழிபடுவார்கள்.

உலக மக்களிடையே அரங்கரின் தூயநெறி பரவி முருகப்பெருமானின் வழிபாடுகளும் பெருகி மக்களிடையே மனோபலம் பெருகி நிற்கும், உலகமெங்கும் ஞானிகளின் அருள் பாதுகாப்பை பெற்று பாதுகாப்பான சூழல் உலகமெங்கும் பெருகிடும். மக்களெல்லாம் தம் கடமை உணர்ந்து துறவிகள் போல தியாகம் மிக்கவர்களாக ஆகி நாட்டின் நலனை கருதுகின்ற பொதுநலம் மிக்கவர்களாக ஆகி சுயநலம் இன்றி கருணைமிக்க அன்பர்களாக ஆகி உலகமே அமைதிமிக்க உலகமாக ஆகிடும்.

ஆறுமுக அரங்கரை பின்தொடரும் எல்லா அன்பர்களும் ஜென்மத்தைக் கடைத்தேற்றி உலகினில் துன்பம் இல்லாத மகிழ்வான சமூகத்தினை படைப்பார்கள். உலகமெலாம் ஞானதேசிகனின் ஞானக் கொள்கையே மக்களை ஆளும். உலகினில் ஞானத்தலைவன் முருகப்பெருமானின் தலைமையும் உண்டாகி வரலாற்றில் பெரும் மாற்றங்கள் உருவாகும். மக்களின் எண்ணமெல்லாம் தருமசிந்தையும் எதிலும் பேதாபேதமில்லா சமநிலையை உலகம் காணும்.

துறையூர் எல்லையில் ஏழாம் படை வீடு ஓங்காரக்குடிலினை சார்ந்து நடக்கின்ற தானதரும அன்னதான பணிகளே இவ்வுலகின் துன்பமெல்லாம் தீர்த்து கலியுகம் மாற்றி ஞானயுகம் படைக்கும் வல்லமை மிக்கதாகும். ஏழாம் படை வீடு அரங்கமகானின் வழி ஒன்றே யுகமாற்ற வழியாகும்.

ஆதலினால் உலக மக்களே அவதாரம் புரிந்து யுகமாற்றம் செய்ய வந்துள்ள அரங்கமகானை முழுமனதாய் நம்பிக்கையோடு ஏற்றுக் கொண்டு அரங்கரை பின் தொடர்ந்து அரங்கர் ஆற்றும் தானதருமங்களுக்கு பொருளுதவிகள் செய்தும், தொண்டுகள் செய்தும் வாருங்கள். அரங்கரின் தருமம் உலகினில் பரவபரவ, உலகமெங்கும் பசுமை வளம் பரவும். நாடெங்கும் பருவமழை தவறாமல் பெய்து நாடே செழிப்பாகும். இயற்கை பலமும் சிறப்பான கருணையுள்ள ஆட்சியும் நாட்டினில் உருவாகி சிறப்புமிக்க பண்புள்ள ஞானவான்களால் நாடுகள் ஆட்சி செய்யப்பட்டு இந்த உலகமே ஞானயுகமாக ஆகிடும்.

ஆதலினாலே ஞானசக்தியான முருகப்பெருமானின் சக்தி வடிவமாகிய ஆறுமுக அரங்கமகா தேசிகரே, முருகப்பெருமான் முறையோடு உலகமாற்றம் செய்கின்ற வல்லமைமிக்க வள்ளல் ஞானியே, அரங்கமகா தேசிகரே உமது தலைமை இவ்வுலகினில் விரைந்து வருக வெல்க எனக் கூறுகிறார் மகான் பதஞ்சலியார்.

–சுபம்–